421

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுல நாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய, சித்திரை; 17—4—53 தளிர்–29

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

அன்பினால் உயிர்நிலை

உடம்பில், உயிர் உள்ள நிலை ஒன்று. உயிரில்லாத நிலை ஒன்று. உயிருள்ள நிலையில் ஒவ்வொருவருக்கும் சிறிதாவது அன்பு நிகழ்ந்தே தீரும். அன்பு அதிகம் இருப்போருக்கு அன்பின் வழியாகவே அவருடைய நினைவு சொல் செயல்கள் நிகழும். இதனால் "அன்பின் வழியது உயிர் நிலை" என்னும் உண்மையை அறிகின்றோம்.

மேலும், ஒரு நம்பியும் ஒரு நங்கையும் முதலில் அன்பு கொள்வர். அந்த அன்பின் வழியாகவே உயிர்கள் உடலோடு கூடிப் பிறவிக்கு வந்து உயிர்நிலை பெறுகின்றன. பிறந்த பின்பும் குழந்தைகள் தாய் தந்தையர் அன்பின்வழியாகவே உயிர் நிலை பெற்று வாழ்ந்து வருகின்றன. அப்படியே அரசன், குரு, முதலானோரது அன்பின் வழியில் அவ்வுயிர்கள் உலகத்தில் நிலை பெற்று வாழ்ந்து வருகின்றனர். உலகத்தில் எல்லாருடைய உயிர் நிலையும் இவ்வாறே அன்பின் வழியதாய் அமைதலைத் தெரிந்து கொள்ளலாம்.

உடம்போடு கூடியிருக்குங் காரணத்தால் ஏதோ ஒரு சிறிது அன்புள்ளம் இருந்துவிட்டால் போதுமா? பெருங்காயமில்லாமல் அதன் மணமட்டும் ஒரு சிறிது உடைய குடுவை கறிக்கு உதவுமோ? அன்பில்லாமல் உடம்பில் உயிர் இருப்பதும், அன்பு மிகுதியாய் இல்லாமல் ஒரு சிறிதே அதன் விளக்கம் இருப்பதும் வாழ்க்கைக்கு எப்படி உதவும்? உயிர் நிலை உடையவராகவே அத்தகையோரை எண்ணுதல் இயலாது. வெறும் எலும்பும் தோலும் மூடிய உயிரற்ற உடம்பென்றே அவ் வுடம்பை உலகம் இகழும்.

அன்பில்லாதவருக்கு, அன்புக்கு முதன்மை கொடுத்து அதன் வழியாய் வாழ்க்கையை நடத்தாதவர்க்கு, இனிமையும் உயிர்ப்புச் செழிப்பும் குறைந்துவிடும்; உடல் எலும்பும் தோலுமாய்க் களைத்துப் வலி கெட்டும் நோய் மூண்டு பாழாகும். அன்பே அதற்கு மருந்து! அதன் வழியதே உயிர் நிலை!

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.**

அன்பின் வழியது உயிர்நிலை— அன்பைப் பின் பற்றிய நிலையே உயிர் உள்ள நிலையாவது; அஃதிலார்க்கு— அவ் வன்பு இல்லாதவர்க்கு, என்பு தோல் போர்த்த உடம்பு—எலும்பும் தோலும் மூடிய வெற்றுடம்பே உளதாவது.

உயிர் இருந்தும், அன்பு இல்லாதவர், உயிர் வாழ்வோராகக் கருதப்படார் என்பது.

அன்பு உயிரின் இயல்பாதலால் உயிருள்ள நிலை அன்பின் வழியதாய் இருக்கும் என்றும், உயிர்த் தன்மையாகிய அன்பு இல்லாத நிலை உயிரில்லாத நிலையே என்றற்கு, "என்பு தோல் போர்த்த உடம்பு" என்றார்.

'என்பு தோல் போர்த்த' என்ற குறிப்பால், வேறு ஒன்றும் உள்ளீடு இல்லை என்னும் கருத்தும், வெற்று ஆரவாரமே என்னும் கருத்தும் தேரப்படும்.

உயிர் நிலைபெற்றிருப்பதற்கும் அன்பின் வழியே உதவும் என்பது, "அன்பின் வழியது உயிர் நிலை" என்பதனால் விளங்கிற்று.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, சித்திரை,	தளிர்
5	17-4-53 வெள்ளி	29

தமிழர் முயற்சி

சித்தூர் மாவட்டம் முழுவதும் தெலுங்கு பேசப்படும் இடம் என்று கூறப்பட்ட போது அதனை மறுத்துப் பல அறிக்கைகள் கூட்டக ஆட்சிக்கு அனுப்பப் பட்டன. எனினும் நடுவர் திரு. வாஞ்சுவுக்கும் இது தகராறுள்ள இடம் என்பது எடுத்துக் காட்டப்பட்டது. எனினும் இவை பொருட்படுத்தப்படவில்லை. முழு மாவட்டமும் ஆந்திர நாட்டுடன் சேரும் என்றும் பிறகு எல்லைக் குழு அமைக்கப் பட்டுச் சரியான எல்லைகள் வகுக்கப்படும் என்றும், ஆந்திர மாகாணத்தைப் பற்றித் தலைமை அமைச்சரின் அறிவிப்பு தெரிவிக்கின்றது.

சித்தூர் மாவட்டத்தில் கால் பாகமாகிய இரண்டு வட்டங்களே முற்றிலும் தெலுங்கு வழங்கும் இடம்; ஏனை முக்கால் பாகமாகிய ஆறு வட்டங்கள் பெரும்பாலும் தமிழ் வழங்கும் இடம்; இப்படியிருக்கும் ஒரு மாவட்டதைத் தமிழ் நாட்டுடன் சேர்த்துப் பின் எல்லை பிரிப்பதே தகுதி; ஆந்திர நாட்டுடன் சேர்த்துப் பின் எல்லை பிரிப்பது தகுதியாகாதே. எல்லைக் குழு அமைத்து எல்லை பிரிக்கப்பட வேண்டிய மாவட்டம், அதாவது தகராறுக்கிடமான மாவட்டம், பொதுப் பகுதியாகிய எஞ்சிய சென்னை அரசில் இருப்பதே முறை.

அதோடு, ஆந்திரர்களின் போக்கு, அல்லாதவரின் கலவரத்தை மேலும் வளர்க்கக் கூடியதாய் உள்ளது. ஆந்திர நாட்டிலிருந்து வரும் அலுவலகத் தலைவர்களும் பள்ளி ஆசிரியர்களும் அரசியல் தலைவர்களும் இம் மாவட்டத்தின் வட பகுதியிலிருந்து வரும் நாட்டாண்மைக் கழக உறுப்பினரும் தலைவர்களும் தமிழ்ப் பகுதிகளை உரு மாற்றி வருகின்றனர். தமிழ் வழக்கு அங்கு ஆண்டுக்கு ஆண்டு குறைக்கப்பட்டு வருகின்றது. இப் பகுதிகள் ஆந்திர நாட்டுடன் இப்பொழுது சேரும் என்று தலைமை அமைச்சர் கூறியிருப்பதால், இவ் வேலை மேலும் பரபரப்போடு நடைபெறும் என்று எதிர்ப்பார்க்க இடமிருக்கிறது. அங்குள்ள தமிழர்கள் மொழித் துறையில் அடக்கியாளப்படுகின்றனர். அவர்கள் வாழ்வியலும் மொழியை அடிப்படை மாறி வருகின்றது. இந்நிலையில் எல்லைக் குழுவை அமைப்பதற்கு நாட் செல்லுமானல் இப்பொழுதுள்ள தமிழுணர்ச்சியும் அழிக்கப்படும். பிறகு, மொகஞ்ச தாரோ, அரப்பா முதலிய இடங்கள்வரை தமிழர்கள் வாழ்ந்தனர் என்பது போல, சித்தூர் மாவட்டத்தின் ஆறு தாலுக்காக்களிலும் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பது ஒரு வரலாற்றுக் கதையாகிவிடும். இதனைத் தமிழர்கள் உணரவேண்டும். உணர்ந்து, ஆந்திர நாட்டு ஆட்சி தொடங்குமுன்பே எல்லைக் குழு வேலையைத் தொடங்க வேண்டுமென்று முயற்சி செய்ய வேண்டும்.

ஆந்திரம் பிரிந்த உடனே மிகுந்த சென்னை மாகாணத்திலுள்ள வேற்று மொழிப் பகுதிகளை அவ்வம் மொழிகளுடன் சேர்த்தும், பிற மொழி நாடுகளுள் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் சேர்த்தும், இதற்குத் தமிழ்நாடென்னும் பெயரை வைக்க வேண்டுமென்றும் முயற்சி செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டின் சட்ட அவையிலும், அலுவலகங்களிலும், தமிழ் வழங்கப்படவேண்டுமென்றும் புதிய தனித் தமிழ்ச் சொற்களை உண்டாக்கப் புலவர்கள் அடங்கிய குழுவை ஆட்சியே அமைக்கவேண்டும் என்றும் முயற்சி செய்ய வேண்டும்.

இம் முயற்சிகள் காந்திய முறையில் பிறர்க்கு ஊறு செய்யா வகையில், அமைய வேண்டும். இதற்குத் தமிழர்களிடையே ஒற்றுமையும், உறுதிப்பாடும், தவ உணர்ச்சியும் வளரவேண்டும்.

மெய்கண்டான்.

குருகுலச் செய்தி

யாம் கண்ட நல்லோர்

(முன் தொடர்ச்சி)

குமர கோட்டத்தில்: (26-6-52)

கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவசாரியர் குருக்களாக இருந்து பூசித்த முருகன் கோயிலே குமர கோட்டம் என்பது. அது சோமாஸ்கந்த மூர்த்தத்தை நினைவூட்டுவது போலக் காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் காமாட்சியம்மன் கோயிலுக்கும் இடையில் இருக்கிறது.

இக்கோயில் முருகனின் நின்ற திருக்கோலக் காட்சி மிகவும் எடுப்பாகக் கொடிமரத் தண்டையிலிருந்தும் நன்கு காணக்கூடிய வகையில் இருக்கும்.

காமக் கோட்டத்தில் எதிர்ப்பட்ட அம்மையாரும் தம் மகளுடன் குமரகோட்டத்துக்கு வந்தனர். எங்களை இக் கோயிலில் தேவாரம் பாடும் திரு. V சுந்தரேச ஓதுவார் என்னும் இளைஞர் மிக்க அன்புடன் எதிர் கொண்டழைத்துக்கொண்டு போய் நன்முறையில் வழிபாடு செய்வித்தார். அவரும் மேலே குறிப்பிட்ட கலைக்கண்ணம்மையும் பாடல்கள் பாடி வழிபாட்டைச் சிறப்பித்தனர். ஆசிரியர், வாழ்க்கையில் குமரன் நிலையைப் புலப்படுத்துவது எப்படி என்றும், அறம் பொருளின்பநிலைகளை நன்குணர்ந்து பயில்வதே அதற்குரிய வழி என்றும் சிறிது நேரம் உரை நிகழ்த்தினர்.

அடுத்து, அவ்வோதுவார் எங்கள் எல்லோருக்கும் அக்கோயிலில் முன்னாள் நடந்த சந்தனக் காப்புச் சிறப்பைக் கூறிச் சந்தனமும், மலரும் வழங்கும்படி செய்தார். அவர் அன்பைக் கண்டு மகிழ்ந்து பாராட்டிக் கழுக்குன்ற விழாவுக்கு அழைத்து விட்டு, விடைபெற்றுக் கொண்டு விரைந்து இரயில் நிலயத்தை அடைந்து அன்று பிற்பகல் திருக்கழுக்குன்றம் சேர்ந்தோம்.

திருக்கழுக்குன்றத்தில்: (26, 27, 28, 29-6-52)

எங்கள் திருப்பயணம் திருக்கழுக்குன்றத்தை நோக்கியே நடைபெற்றது. தொண்ட நாட்டில் நால்வர் பாடலும் பெற்றுள்ள—அரிய பல அமைப்புகளுடன் கூடிய— அவ்விடத்தில் ஆண்டுதோறும் மணிவாசகர் திருநாளாகிய ஆனி மகத்தில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் மிகச் சிறப்பாகத் திருமுறை விழாவும் பேரணியும் நடத்துகின்றனர்.

எங்கள் குருகுலத்தாரும் சென்னையிலுள்ள மற்றும் சில அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் அந் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மூலமாக இருந்து ஊக்கமூட்டி வருபவர் ஆசிரியர் அவர்களே ஆதலின், அவ்விடத்து நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறைந்த அளவு தொண்ட மண்டலம் வரையிலாவது நல்ல விளம்பரம் செய்ய வேண்டும் என்று எண்ணியே இத்திருப் பயணத்தைத் திருக்கழுக்குன்றச் சிறப்புகளுக்கு முன்னால் மேற்கொண்டு இயன்ற இடங்களில் எல்லாம் அவைகளைப் பற்றி அங்கங்கே விளக்கிப் பேசிக் கொண்டு (பிரசாரம் செய்து) வந்தார்கள்.

ஆசிரியரின் இத்தகைய முயற்சிகளால் இவ் வாண்டுக் கழுக்குன்றவிழா பெருஞ் சிறப்போடு பல்லாயிரக் கணக்கான மக்கள் முழுமைப் பயன் பெறும் வகையில் நடைபெற்றது.

அவ்விழாப் பற்றிய விவரங்கள் அப்போதைய முல்லைக் கொடியில் வந்திருக்கின்றன.

(முற்றும்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

அருள் துறை

நெஞ்சு விடு தூது

(முத்துசாமி)

"நெறிகொள்......அளவன்"

பூதவெளியினுள் வித்தியாதத்துவ வெளி உள்ளது; அதனுள் சுத்த தத்துவவெளியுளது. அச்சுத்த தத்துவ வெளியில் வெளியாக இருப்பவன் இறைவன். அந்த வெளியில் மூலாதார ஒளி, இதய ஒளி, புருவ நடு ஒளி, இவ்வொளிகளில் விளங்குகிற ஒளியானவன் இறைவன். இப்படி ஒளியாய் விளங்கும் இறைவன் பொதுமக்களிடமும் தேவர்களிடமும் அடியார்களிடமும் கருணையாயிருப்பவன். பொது மக்களால் அளக்க முடியாதபடி எட்டாதவனாயும் அப்படியே தேவர்களுக்கும் எட்டாதவனாயும் இருப்பன். ஆனால் அடியார்களுக்கு எட்டும் அளவில் வருவன். இவ்விதமான நெறியுடையவன் இறைவன்.

இவ் வடிகளில் இறைவனியல்பு நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறது.

வெளியில் வெளியில் வெளி-- சுத்த தத்துவ வெளி, பூதவெளியினும் நுட்பமாயது வித்தியா தத்துவ வெளி; அதனினும் நுட்பமாயது சுத்த தத்துவ வெளி. இறைவனுடைய, இயக்கம் சுத்த தத்துவ வெளியிலேயே நன்றாயிருக்குமானமையின் அச் சுத்த தத்துவ வெளியில் வெளியாயிருப்பவன் என்றார். இதனால் சுத்த தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பது பொருளாயிற்று.

ஒளியில் ஒளியில் ஒளியன்— மூலாதாரத்தில் தெய்வசக்தி முதலில் நிறைந்து பின்னர் மேல் ஆதாரங்களில் செல்லும். மேல் ஆதாரங்களில் முக்கியமானவை இதயமும் புருவ நடுவும். நடு நாடியில் ஆறு ஆதாரங்கள் உள. அவற்றில் மூலாதாரம் இதயம் புருவநடு முக்கியம். இம்மூன்று இடங்களிலும் ஒளியாய் விளங்குபவன் என்பார் 'ஒளியில் ஒளியில் ஒளியன்' என்றார்.

அளியில் அளியன் அளியன்— பொதுமக்கள் அன்பிலும் தேவர்கள் அன்பிலும் அடியார்கள் அன்பிலும் கருணையாயிருப்பவன். அளி—அன்பு. கருணை— அன்பின் முதிர்ச்சி. கருணைக்கு மேல் ஒரு பண்பு இல்லை. அதனாலேயே கருணையாற் கொண்ட கொல்லாமை யறம், முடிந்த அறமாயிற்று. இறைவன் கருணை வடிவமாயிருப்பவன். நாமும் அப்பண்பு பெற்றாலே அவனை அடைய முடியும்.

அளவில் அளவில் அளவன்— இறைவனைப் பொது மக்களும் எட்ட முயற்சிக்கிறார்கள்; தேவர்களும் முயற்சிக்கிறார்கள் அடியார்களும் முயற்சிக்கிறார்கள். யாருடைய முயற்சிக்கு எட்டுவான் என்றால், அடியார்கள் முயற்சிக்கே எட்டுவான். அளவு இல் என்று பிரித்துப் பொருள் செய்க.

இவ்விதமான ஒரு நெறியுடையவன் என்பார் 'நெறிகொள்' என்றார்.

"அளவிறந்து.....பேணிக் கேள்"

யாராலும் முழுமையும் அளந்தறிய முடியாதபடி அளவிறந்து நின்றவன். எல்லாருள்ளத்திலும் நிறைந்தவன்; தன்னை நினைப்பவர்பால் செல்வன். ஆராய்ந்து அறிய முடியாதவன். குறையாத விளக்காய் நிறைந்து வளரும் சுடரானவன். மண்மேல் யாராலும் அசைக்க முடியாதபடி நிலையான பெருஞ் சோதியாயிருப்பவன். உளக் கண்ணுக்கல்லாது ஊனக் கண்ணுக்குத் தோன்றாதவன். மலப்பொருளல்லாதவன். உலகிலெல்லாம் ஊன்றாமல் நிலையாக நிற்பவன்; சொல் மிகுந்த தன்மையில் உள்ள ஈசன் பெருமையை — இன்று உனக்குச் சொன்னவற்றையெல்லாம் — போற்றிக் கேள்.

அடியார்க்கு எட்டுவன் என்றால் அவர்கள் எட்டும் அளவு மட்டுமோ இறைவன் அளவு! அடியார்கள் சிறிது எட்டுவார்கள். முழுதும் அளந்தறிய யாராலும் முடியாது.

கடற்பரப்பு வானப்பரப்பு முதலியவற்றையே முழுதும் அறிய முடியாதபோது இறைவனது பரப்பை யெல்லாம் எப்படி அறிய முடியும்? ஆகவே அளவிறந்தவன் இறைவன் என்றார்.

இப்படி அளவு கடந்த தன்மையி லிருந்தாலும் யாவர்க்கும் உதவுபவன். யாவர்க்கும் உதவ வேண்டுமாயின் எங்கும் நிறைந்திருக்க வேண்டும். ஆகவே 'அனைத்தும்' நிறைந்தான் என்

றார். சிலர் இறைவன் என்று ஒருவன் இருந்தால் இருக்கட்டும். நாம் ஏன் அவனை நினைக்க வேண்டும் என்பர். நமக்கு எப்பொழுதும் இறைவன் உதவிக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்தால், இப்படிச் சொல்லமாட்டார். உதவுகிற ஒருவனை நினைக்காமலிருக்க முடியுமா? அவர்களுக்கு எப்படித்தான் முடிகிறதோ?

இறைவனை ஆராய்ந்து இப்படி இருப்பன் என்று முடிவு கட்ட முடியாது. நமக்கு மனம் என்று ஒன்று இருக்கிறதே, அது இப்படியிருக்கும், இன்ன நிறத்திலிருக்கும், இன்ன வடிவிலிருக்கும், இவ்வளவு நிறையுள்ளது என்று யாராவது கூறியிருக்கிறார்களா? மனத்தை இப்படிக் கூறமுடியாத காரணத்தாலேயே மனம் என்று ஒன்று இல்லையென்று சொல்லி விடமுடியுமா? அது இருக்கிறது என்பதை நாம் தினமும் உணர்கிறோமே. இந்தச் சிறு பொருளாகிய மனத்தையே அறிய முடியாமல் உணர வேண்டுமாயின் இன்னும் நுட்பமான இறைவனை இப்படியெல்லாம் அறிய முடியுமா? அறியமுடியாததாலேயே இல்லையெனலாமோ? அவனை உணர முடியும், அறியமுடியாது. நம்மால் உணரமுடியவில்லையென்றால், நமக்கு அதற்கு ஏற்ற உணர்வு வளர்ச்சியில்லையென்று தான் பொருள். உமாபதி சிவம் உணர்ந்துதானே தம் நூலில் ஊனக் கண்ணுக்குத் தெரியும் பெருஞ்சோதி என்கிறார். நாம் சிறு சிறு சோதிகளையே பார்க்கத் தெரிந்திருக்கிறோம். இவற்றை மறந்தால் அந்தப் பெரிய சோதி ஊனக் கண்ணில் தெரியும். மாயைப் பொருளைப் பார்க்கும் கண் ஊனக் கண். இறைவனை உணரும் கண் உளக் கண்.

இறைவன் எங்கும் கலந்திருக்கிறான்; ஆனால் ஒன்றி நிற்கவில்லை. எப்படியெனின் தாமரையிலைத் தண்ணீர்போல. அவ்வாறு நமக்கும் உலகில் பட்டும் படாமலும் இருக்கத் தெரிய வேண்டும். படுதல் பிறர்க்கு உதவ; படாமை நம் ஆற்றலைப் பெருக்க.

இவ்வாறு நெஞ்சத்தைப் பார்த்து இறைவன் இயல்பை விளங்கக் கூறினார்.

பணித் துறை

* குருகுலத்தில் *

திருக்குறள் அதிகாரச் செய்கைகள்

(பாயிரம்)

1. கடவுள் வாழ்த்து:

1. வடதிருச்சிற்றம்பலம் என்னும் திருத்தலத்தைப் புதுப்பித்தல். [இப்போது கோவிந்தராசபுரம் என வழங்கும் இடமே அது; தெற்கே பிள்ளையார் திருக்கோயில் உள்ளது; கற்கோயிலாக எழுப்பவேண்டும்; வடக்கே வடதிருச்சிற்றம்பலம் அரிய பெரிய அளவில் அமையவேண்டும். இடையே அவற்றின் விளக்கங்களுக்கான, வழிபடுவோர்க்கான, நிலையங்கள் எழலாம்.]

இது, அருகிணகிரிநாதர் பாடல் பெற்றிருத்தலின், அத் திருப்புகழையும் அருணகிரியார் திருவுருவையும் அங்கே அமைப்பது முறையாகும்.

2. திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் அருளிச் செய்த கருத்துக்களை நன்கு விளக்குவதற்கும், பரவச்செய்தற்கும் ஏற்ற நிலைகளைக் கோலி அவற்றை மேற் கொள்ளுதல் (எல்லா அதிகாரங்கட்கும் இம் முறைமை பொருந்தும்.)

3. திருவருள் விளக்கத்தை உலகுக்குத் தெரியச் செய்யும் அதன் அடிப்படையிலும் ஆற்றலிலும் வழியிலும் உலக காரியங்களையும் வாழ்க்கையையும் நடத்தவும் நெறியைப் புலப்படுத்துதல். [குறள் காட்டும் பாதையில் திருவருள் நெறியிற் பழகியே ஒழுகியே இதனை மெய்ப்பிக்க வேண்டும்; உரியவரை அங்கே இருத்தி இவ்வாறு செய்யலாம்.]

2. வான்சிறப்பு:

1. வடதிருச்சிற்றம்பலத்தில் நல்ல தீர்த்தத்தை அமைத்தல்; [அங்கே இருக்கும் குட்டைகளைத் திருக்குளமாகவும் நடைகிணறாகவும் அமைப்பது பொருந்தும்.]

2. குருகுலத்தில் அங்கங்கும் நீர் வசதிகட்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

[நீரூற்று மிகுந்த இடங் கண்டு குழாய் இறக்கித் தேக்கத்தில் நீர்ப்பொறி கொண்டு இறைத்து நீர் நிரப்பிக் குருகுலமெங்கும் நீர்க்குழாய் வசதிகளைப் பெருக்குதல்;

பயிர், தோட்டக்கால், தோப்புகள் முதலியவை பெருகவும், பூங்காக்கள், பூந் தோட்டங்கள் வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்தல்.

குருகுல வாழ்க்கை நடத்தும் விடுதிப் பிள்ளைகளும், ஏனைக் குருகுலத்தாரும், வருவார் போவாரும், குளிக்க நீரமைப்புகள் வசதிகளோடு செய்தல்; நீந்தல் குளம் அமைத்தல்.

குருகுலத்தில் பள்ளமுள்ள வாய்ப்பான இடங்களை யெல்லாம் நீர் தேங்குதற்கான ஏற்பாடும் அவற்றை நீர்ப்பாய்ச்சல் முதலிய பல வகைகளில் பயன் கொள்ளுதலும் செய்தல்.

3. தக்கபடி அவ்வப்போதும் மழை பெய்வதற்கான அறவொழுக்கங்களும் தியானங்களும் கடமையோடு உருக்கமாகச் செய்து வருதல்!

இம் முறைமையை அங்கங்கும் பரவச் செய்தல்!

நீரின் தேவை, அது பயன்படும் முறைகள், பயன் படுத்தும் புது முயற்சிகள், அணைக்கட்டுகளின் விளக்கங்கள் முதலியவை தோன்றவும், மழை பெய்யும் இடங்கள், வெள்ளம் வருங் காட்சிகள், மழையின் ஆட்சிகள் முதலியவை தோன்றவும் ஓர் அழகிய திறமான பொருட் கண்காட்சி அமைத்தல்.

இக் கண் காட்சியைத் திருக்குறள் வான் சிறப்புக் கருத்துகளமைந்த கண் காட்சிப் பகுதியாகப் பொருத்தி அமைத்தல்.

5. நீரின் குளிர்ச்சி இனிமைகளை நுகரும்படி ஒரு வேனில் இனிமை நிலையம் நிலையாக அமைத்தல்.

3. நீத்தார் பெருமை:

1. அறவோர், அமைந்த வரையில், தம் பெருமைகள் செயன் முறையில் திகழ வீற்றிருத்தல்.

2. ஓர் அறவோர் தலைமை தோன்ற, அவர்க்கு இருக்கையமைப்பு (ஆசிரமம்) அமைத்தல்.

3 அதிகாரக் கருத்துக்களை அங்கங்கும் முதன்மையோடு பரவச் செய்தல்.

4. நாட்டிலுள்ள அறவோருடன் தொடர்பு வைத்துக் கொண்டு, அக் குழுவோரை ஒருங்கு காணவும், அவருரைகள் நெறிமுறைகள் செய்கைகள் காணவும் முயலுதல்.

5. அறவோர்க்கு வழிபாடாற்றுதல்.

6. அறவோர் இருப்புக்குத் தேவையான வசதிகளை நிலைபெறுத்தல்.

4. அறன் வலியுறுத்தல்

1. இந்த அதிகாரமே, திருக்குறளின் இதயம்; இதன் விரிவே ஏனையெல்லாம் எனலாம்; மக்களின் நற்கடமைகளின் வலிமையை இது கூறுகிறது. ஆதலால், இதனைக் கடைப்பிடித்தால் அல்லாமல், பிறவியெடுத்து உயிர் வாழ்ந்து பயனே இல்லை என்னும் உணர்ச்சி தோன்றும்படி, உலகுக்கு இதன் கருத்துக்களை ஆணித்தரமாகவும், விளக்கமாகவும் நன்கு பரவச் செய்யும் முறைகளைக் கோலவேண்டும்.

அவை: குருகுலத்தில் அறம் உரைக்கும் மண்டபம் நிறுவல்; நாடோறும் அல்லது இயன்ற காலங்கள்தோறும் உணர்வுடன் கேட்கும்படி குறித்த நோக்கில் அந்த மண்டபத்தில் இருந்து அறவோர் அறம் உரைக்க ஏற்பாடு செய்தல்.

(ஆ) முன்னும் பின்னும் அறங்கள் செய்தவர்கட்கு அந்த அறம் எப்படிப் பயன் ஊட்டுகின்றது என்னும் விளக்கங்களைப் பொருட்காட்சிகள், நூல்கள் முதலியவற்றின் வாயிலாகப் புலப்படுத்தல்

(இ) குருகுலத்தில் எல்லாரும் வழுவாமல் நடக்க இயன்றவரை பாடுபடல்.

(ஈ) வழுவாதிருக்கவும், வழுவின் இன்னவென்று காட்டவும் நீதி மன்றம் ஒன்று நிறுவல்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
3, கிடங்குதெரு சென்னை 1.

திருவாசகத்தின் பெருமை

(புலவர். மயிலை. சிவ முத்து.)

நம் நாட்டில் ஏற்பட்ட பற்பல இடையூறுகளால் அருமைத் தமிழ் நூல்கள் பல அழிந்தொழிந்தன. மதப் புரட்சி காரணமாகவும், மன்னர் பகை காரணமாகவும் பல்வகைக் குழப்பங்கள் நம் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளன. அக் குழப்பங்களில் நம் நாட்டு மக்கள் பலர் மடிந்தனர். அரிய பெரிய நூல்கள் பல நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டன. மண்ணின் கீழ்ப் புதைக்கப்பட்டும், பகைவர்க்கு அஞ்சி மறைத்துவைக்கப்பட்டும் மறைந்தொழிந்த நூல்கள் எண்ணற்றன எனலாம்.

இத்தகைய குழப்பங்களிலும் இறவாத புகழுடைய நூல்களாய், சிறிதும் சிதையாத நூல்களாய்ப் பண்டு முதல் இன்றளவும் போற்றப்பட்டுவரும் நூல்களாய் நமக்குக் கிடைத்தன சிலவே. அவைகளில் வள்ளுவப் பெருந்தகையார் இயற்றிய உலகப் பொதுமறையாகிய திருக்குறளும், அறிவாற் சிவனே என்று போற்றப்படும் மணிவாசகப் பெருந்தகையார் இயற்றிய ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் திருவாசகமும் ஆகிய இரண்டும் சிறப்பாகக் குறிக்கத் தக்கனவாகும்.

இம்மைக்குத் திருக்குறளையும் மறுமைக்குத் திருவாசகத்தையும் மக்கள் துணையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மருத்துவரும் தம்மைக் கைவிட்டார் என்ற நிலை வரும் பொழுது சில நோயாளிகள் திருவாசகத்தையே தமக்குப் பெருந்துணையாகக் கொள்கின்றனர்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. திருவாசகம் நம் உள்ளத்தை உருக்கும் உயரிய நூல்; மக்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் தனிப் பெரு நூல்; இவ் வுலக இன்ப துன்பங்களை விளக்கிக் காட்ட வல்ல அரிய ஞான நூல்; எளிய இனிய சொற்களால் நம் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு அரிய பெரிய செய்திகளைத் தெள்ளத் தெளியத் தெரிவிக்கும் தெய்வ நூல். இந் நூலைப் போற்றாத புலவர்கள் இலர்; எடுத்தாளாத அறிஞர்கள் இலர்.

இத் திருவாசகம் தோத்திர நூலாக மட்டுமன்றிச் சிறந்த சாத்திர நூலாகவும் திகழ்கின்றது. இதனை அன்போடு கடவுள் திருமுன் நின்று கனிந்துருகிப் பாடுவதுடன் அமையாது இதில் பொதிந்துள்ள அரிய செய்திகளை முறையாகப் பாடங்கேட்டு வருதலும் வேண்டும். இங்ஙனம் முறையாகப் பாடங்கேட்டுணர வேண்டிய இன்றியமையாமையை மணிவாசகரே 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ், பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்று விளக்கியுள்ளார்.

திருவாசகம் சிவபுராணத்தில் 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்று இறைவனைக் குறிக்கின்றார் மணிவாசகர். இத்தொடர் எவ்வளவு பொருள் செறிந்த தொடர் என்பதனைக் கீழ்வரும் விளக்கத்தால் அறியலாம்.

கடவுளை உணர்த்தும் நூல்களில் வேதமே முதன்மையானதென்பர். அத்தகைய வேதங்களே இறைவனை நினைந்து சேய்மை விளியினால் 'ஐயா' என விளித்து நீங்கள் யாண்டுள்ளீர்கள் என்று தேடுமாறு இறைவன் ஓங்கி உயர்ந்து காண்கின்றான். அவ்விறைவனின் முடியை அறிய இயலாவிடினும் அடியையேனும் அறிந்து கொள்ளலாமே எனின், அஃது ஆழ்ந்து ஆழ்ந்து செல்லுகின்றதாம். 'கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான் பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால், சோதி மணி முடி வினவில் சொல்லிறந்து நின்ற தொன்மை' என்ற

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

இடத்து, மணிவாசகரே இவ்வரிய கருத்தை நன்கு விளக்கிக் கூறுகின்றார். இதனால் இறைவன் ஆதியும் அந்தமும் அற்ற பரம்பொருள் என்பதனை இதனினும் அழகாக விளக்கமாக எங்ஙனம் கூற இயலும்; முடி ஓங்கி உயர்ந்தும் அடி பாதாளத்திற்கு அப்பால் இருப்பதுமாய் இருந்தால் இறைவனின் இடைப்பாகம் இப்பூவுலகில் நம்மால் காண்டற்கு எளிதாய் இருத்தல் வேண்டுமே எனின், இறைவன் 'அப்பாலுக் கப்பாலாய்' அகன்று விரிந்து, நம்மால் உணர ஒண்ணா வகையில் விளங்குகின்றமையால் அஃதும் இயலாது என்பதனை 'ஓங்கி ஆழ்ந்து அகன்ற' என்ற தொடரில் 'அகன்ற' என்ற சொல்லால் விளக்குகின்றார். இங்ஙனம் அகன்று பரந்து விரிந்துள்ள ஒரு பொருளின் ஒரு சிறு பகுதியையேனும் கூர்ந்து நோக்கி அறிதல் இயலாதோ எனின், கூர்ந்து நோக்க நோக்க அப்பரம்பொருள் 'சென்று சென்று அணுவாய்த்' தேய்ந்து தேய்ந்து செல்லும் பரமாணுவினும் நுண்ணியதாய் விளங்குகின்றமையின் நம் ஊனக் கண்ணால், அந் நுண்பொருளைக் காணல் இயலாது என்பதனை 'நுண்ணியன்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் மணிவாசகர். 'நோக்கரிய நுண்ணியனே' என்று பிறிதோரிடத்தும் இக்கருத்தை வற்புறுத்துகின்றார். இவ்வளவு அரிய கருத்துக்களையும் 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்ற தொடரில் பொதிந்து வைத்துக் கூறுகின்றார் மணிவாசகர்.

திருவாசகத்தின் பொருளை நாம் சிறிதளவேனும் உணர்ந்து கொள்ள எண்ணினால் அந்நூலின் ஒரு பாட்டைப் படித்த துணையானே பொருள் கொள்ள முற்படுவது பேதைமையாகும். நூல் முழுதும் ஒரு முறைக்குப் பல முறை படித்துணர்ந்த பிறகே முயலவேண்டும். தாம் கூறிய கருத்துக்கு விளக்கமும் தாமே கூறும் முறை திருவள்ளுவரைப் போல் மணிவாசகரிடத்தும் அமைந்திருத்தல் மேற் கூறிய தொடருக்குக் கூறிய விளக்கத்தால் நாம் அறியலாமன்றோ? ஆகவே நூல் முழுதும் பல முறை படித்துணர்தல் எவ்வளவு இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும். இங்ஙனமெல்லாம் சிறந்த பேறிஞராய் விளங்குகின்ற காரணத்தாலேயே 'இலக்கணக் கொத்து' என்ற நூலாசிரியராய சுவாமிநாத தேசிகர் என்பார் மணிவாசகரை 'அறிவாற் சிவனே' என்று போற்றுகின்றனர். அது முக்காலும் பொருந்தும் என்று சொல்லத் தோன்றுகின்றது நமக்கு.

கடவுளின் கடந்த தன்மையை இங்ஙனம் விளக்கிய மணிவாசகர், அங்ஙனம் எவ்வகையாலும் உணர்ந்து கொள்ள முடியாத இறைவனை வழிபட்டும் உரைமுற்பட்டும் பயன் என்ன என்று மக்கள் மனஞ் சலிப்படையாவாறு அவ்விறைவனின் அளப்பருங் கருணையை, அவன் நம்மிடம் கொண்டுள்ள பேரன்பினை, என்றும் நம்மையே மறவாமல் போற்றுகின்ற பண்பினை, நம்மோடு நீக்கமறக் கலந்துள்ள நீர்மையினை அழகுற விளக்குகின்றார்.

ஒரு குழந்தை தொட்டிலில் அயர்ந்து தூங்குகின்றது; நெடு நேரமாகத் தூங்குகின்றது. இதைக் கவனிக்கின்றாள் குழந்தையின் தாய். குழந்தை நெடு நேரமாகப் பால் உண்ணாவில்லையே அழுதலும் செய்யவில்லையே என நினைக்கின்றாள். அப்போதே அவளுக்கு மார்பில் பால் சுரந்து விடுகின்றது. தாயின் தலையன்பிற்கு ஈடுமுண்டோ? அவள் உடனே உச்சி மோந்து அதனை உறக்கத்தினின்று உணர்த்திப் பாலூட்டிப் போற்றுகின்றாள். இங்ஙனமே அறியாமையால் கட்டுப்பட்டு மாயையிலே ஆழ்ந்து கிடக்கும் உயிர்களுக்கு அவ்வுயிர்கள் தம்மை உணரும் ஆற்றல் இலவாயினும் தாமே வலிய வந்து அழியாத பேரின்பமாய தேனினைச் சொரிந்து போற்றுகின்றான் இறைவன். அவன் உயிர்கள் மாட்டு அளவற்ற கருணையுடையவன்; தாய் போற் பேரன்பினன். தாய் குழந்தையைப் பிரியாது குழந்தையின் நினைவோடேயே வாழ்தல் போல, நம்மை விட்டு நீங்காது நம் நலமே குறிக்கோளாய் உள்ளவன் என்ற உண்மையைத் தம் அநுபவத்தையும் சேர்த்து ஓர் அழகிய பாடல் மூலம் கூறுகின்றார்.

"பால்நினைந் தூட்டும்
தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து
புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே"

என்பதே அப்பாடல். இப் பாடலில் தான் என்ன இனிமை! குழைவு! எளிமை! தாயின் தலைசிறந்த பேரன்பை ஒரு முறை நினைத்துப் பார்க்கச் செய்கின்றதன்றோ இவ் வருமைத் திருப்பாடல்! தாய் போன்ற கருணையுடைய இறைவனை அடையச் சலியாமல் முயற்சி செய்யத் தூண்டுகின்றதன்றோ இப்பாடல்!

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், முரம்பாக்கம்: மதராக்ககம் (அஞ்.)